**தலைப்பு 272 – குருணேகலை மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 272 - குருணேகலை மாவட்ட செயலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்ட ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 26 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருணேகலை மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை பெற்றுக் கொள்கையில் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணலின் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை எனினும், சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாடு பற்றிய புரிதல் பெறப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என மதிப்பிடல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்களும் சம்பவங்களும் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளிட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த முன்வைப்பு மதிப்பிடப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| **கடந்த ஆண்டிற்குரிய அறிக்கையில் பந்தித் தொடர்பு** | **செயற்படுத்தியிருக்காத பரிந்துரைகள்** | **இவ் அறிக்கையின் பந்தித் தொடர்பு** |
|---|---|---|
| 3.3 (ஏ) | அரசிற்கு சொந்தமான பெறுமதியான சொத்துத்துக்ளை ஒப்படைக்கும் போது அது பற்றி கண்டறிந்து ஒப்படைக்கப்பட வேண்டிய சொத்துக்களை மாத்திரம் ஒழுங்கு முறையாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 3.6 (ஏ) |
| 3.3 (ஐ) | அரசிற்கு சொந்தமான காணிகளை அனுமதியற்ற குடியிருப்பாளர்களால் கைப்பற்றிக் கொள்வது தொடர்பாக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. | 3.6 (ஐ) |
| 3.7 (ஈ) | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட வேண்டும். | 3.7 |

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

#### (அ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டு நிதியல்லா சொத்துக்கள் கொள்வனவு திணைக்கள புத்தகம் | இவ் வித்தியாசதை திறைசேரி அச்சிட்ட பிரதிகளில் சீர்செய்வதனை 2023 | நிதிக்கூற்றுக்களில் மற்றும் திணைக்கள புத்தகங்களின் |

| | | | |
|---|---|---|---|
| | பிரகாரம் ரூபா 12,626,297 ஆன போதும், அது நிதிக்கூற்றுக்களில் ரூபா 11,539,037 ஆக காண்பித்த காரணத்தால் ரூபா 1,087,260 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | இரண்டாம் காலாண்டில் மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். | மீதிகளை இணக்கஞ் செய்து நிதிக்கூற்றுக்கள் முன்வைக்க வேண்டும். |
| (ii) | மாவட்ட செயலகத்திற்கு சொந்தமான உத்தியோகபூர்வ இல்லம் தொடர்பாக வழங்கியுள்ள கிரயம் மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம், 34 உத்தியோகபூர்வ இல்லங்களின் மதிப்பீட்டு பெறுமதி ரூபா 97,575,925 ஆன போதும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 81,697,976 ஆக காண்பித்ததில் ரூபா 15,877,948 பெறுமதி குறைத்துக் காண்பிக்கப்பட்டு இருந்தது. | ரூபா 81,697,976 ஆக வழங்கிய நடைமுறையல்லா சொத்து அறிக்கை பிரகாரம் கணக்கீடு செய்துள்ள பெறுமதி சரியானது என அறிவிக்கிறேன். | உத்தியோகபூர்வ இல்லங்களின் சரியான மதிப்பீட்டு பெறுமதியை நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |
| (iii) | நிதிக்கூற்றக்கள் பிரகாரம் நிதியல்லா சொத்துக்கள் கணக்கில் குடியிறுப்பற்ற கட்டிட கணக்கில் மற்றும் இயந்தி உபகர கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் நிலவிய இறுதி மீதிகள் மற்றும் 2022 சனவரி 01 திகதியின் ஆரம்ப மீதிகளிற்கு இடையில் முறையே ரூபா 3,106,940 கூடுதலாக மற்றும் ரூபா 32,180 குறைவாக பெறுமதிகள் காண்பிக்கப்பட்டிருந்தன. | திறைசேரி அச்சிட்ட பிரதிகளில் ஆரம்ப மீதிகளில் செம்மையாக்கம் மேற்கொள்ளப்பட்டதால் வித்தியாசம் ஏற்பட்டள்ளது.. | நிதியல்லா சொத்துக்கள் கணக்கின் ஆரம்ப மீதிகள் மற்றும் கடந்த ஆண்டின் இறுதி மீதிகள் வித்தியாசப்படக் கூடாது. |
| (iv) | குளியாபிடிய (கிழக்கு), உடுபத்தாவ, மாஸ்பொத்த, மல்லவபிடிய, ரஸ்நாயகபுர மற்றும் கல்கமுவ ஆகிய 06 பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட்டுள்ள காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்களின் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணிகளை சுவீகரிப்பதற்கு உரிய நடவடிக்கை இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. | பிரதேச செயலகங்களின் காணிகளை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (v) | அரச பாதுகாப்பு மற்றும் இடர் முகாமைத்துவ இராஜாங்க அமைச்சின் கீழ் காணப்படும் சேதிய இடர் நிவாரண சேவை மத்திய நிலையத்தினால் 04 பிரதேச செயலகங்களிற்காக வழங்கியிருந்த நீர் தாங்கியுடனான 04 லொரி வண்டிகளை சுவீகரித்து மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுப்பதுடன், சுவீகரித்த உடனே மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | பிரதேச செயலகங்களிற்கு வழங்கியிருந்த வாகனங்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (vi) | சேதிய இடர் நிவாரண சேவை மத்திய நிலையத்தினால் பிரதேச செயலகங்களிற்கு வழங்கியிருந்த டெக்டர் மற்றும் பவுசர் டேலர் வண்டிகளை பிரதேச செயலாளர்களிற்கு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருந்ததுடன் 19 பிரதேச செயலகங்களிற்கு வழங்கியிருந்த 25 டெக்டர் மற்றும் பவுசர் டேலர் வண்டிகள் மற்றும் இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் மூலம் 17 பிரதேச செயலகங்களிற்கு வழங்கியிருந்த 20 டெக்டர் மற்றும் பவுசர் டேலர் வண்டிகளை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்காத அச் சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் மூவரைக் கொண்ட குழுவொன்றை நியமித்து மதிப்பிடவுள்ளதுடன், மதிப்பீட்டு நடவடிக்கைகள் முடிவடைந்த உடனே கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக. | ஏனைய அமைச்சுகளிலிருந்து பிரதேச செயலகங்களிற்கு வழங்கியுள்ள வாகனங்களை சுவீகரித்து மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (vii) | செலவு விடய இலக்கம் 2509 கீழ் கம சமக பிலிதந்தர நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் பிரதேச செயலகங்களிற்கு மேற்கொண்ட கட்டிடம், சேவை இல்லம் / நில செவன உள்ளிட்ட ஏனைய நிர்மாணங்களை | நிர்மாணங்களின் உரிமையை குறித்த நிறுவனங்களிற்கு ஒப்படைக்க எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அறவிக்கிறேன். | பிரசேத செயலகத்தின் கீழ் காணப்படும் கட்டிடங்களை சுவீகரித்து பெறுமதியை மதிப்பிட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொருத்தமான வகையில் சுவீகரித்து நிதியல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (viii) | நாரம்மல பிரசேத செயலகத்திற்கு சொந்தமான புதிதான நிலையிலுள்ள சம்பூரண உத்தியோகபூர்வ இல்லத்தை ரூபா 6,229,500 பெறுமதிக்கு மதிப்பிட்டுள்ள போதும், அம் மதிப்பீட்டு பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை. | ரூபா 6,229,500 பெறுமதிக்கு மதிப்பிட்டுள்ளதுடன், இப் பெறுமதி கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சம்பூரண உத்தியோகபூர்வ இல்லத்தை மதிப்பிட்டுள்ள போதும், வெவ்வேறாக இனங்கானக் கூடிய வகையில் கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ix) | நிகவரடிய பிரதேச செயலகத்தின் கம சமக பிலிதந்தர நிகழ்ச்சித் திட்டத்திற்காக 272-1-1-0-2509 செலவு விடயத்தின் கீழ் ஆண்டிறுதியில் மேலும் உட்பட்டிருந்த ரூபா 22,398,664 ஆன பொறுப்புக்கள் பெறுமதி திறைசேரி அச்சிட்ட குறிப்புக்களில் காண்பிக்கப்பட்டிருந்த போதும், அதனை நிதிக்கூற்றக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை. | 2022 முதலாம் காலாண்டில் மாத்திரம் ஏற்பாடு கிடைத்துள்ளதுடன், முதலாம் காலாண்டில் அனைத்து செலவுகளையும் மேற்கொண்டு முடிவித்துள்ளதால் மேலும் உட்பட்ட பொறுப்புக்கள் இல்லாதிருந்தது. | பொறுப்புக்களின் பெறுமதியை காண்பிக்கையில் திறைசேரியுடன் உரிய முகாமைத்துவத்துடன் கூடியவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(ஆ) கணக்காய்வு சான்றுகள் இல்லாமை**

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்காய்வு சான்றுகள் சமர்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 06 பிரதேச செயலகங்களினால் நீண்ட காலமாக பயன்படுத்தும் 07 உத்தியோகபூர்வ இல்லங்களை ரூபா 23,780,480 இற்கு மதிப்பிட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ள போதும், குறித்த பெறுமதிகளை நிதி நிலைமை கூற்றில் நிதியல்லா சொத்துக்களின் | கணக்கீடு செய்துள்ள அலுவலகங்களில் மற்றும் நிதிக்கூற்றுக்களினுள் கட்டிட மதிப்பீட்டு பெறுமதி உள்ளடக்கப்பட்டிருந்தது. | உத்தியோகபூர்வ இல்ல மீதிகளை உறுதி செய்து கொள்ள அட்டவணைகள் சமர்ப்பிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கீழ் காண்பிக்கப்பட்டு இருக்காததுடன், அதற்குரிய நிலையான சொத்து அட்டவணைகளிலுள்ள மீதிகளை உறுதி செய்து கொள்ள பகுப்பாய்வொன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | பிரதேச செயலக வளவில் அமைந்துள்ள 07 உத்தியோகபூர்வ இல்லங்கள் பிரதேச செயலாளர்களின் பயன்படுத்தப்படுவதுடன், இவ் இல்லங்களை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்த நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அதற்குரிய அட்டவணைகளின் மீதிகளை உறுதி செய்து கொள்ள பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரதேச செயலக வளவில் அமைந்துள்ள உத்தியோகபூர்வ இல்லங்கள் ஏற்கனவே கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. | பிரதேச செயலாளர்கள் பயன்படுத்தப்படும் உத்தியோகபூர்வ இல்லங்களை மதிப்பிட்டு மீதிகளை உறுதிப்படுத்த அட்டவணை சமர்ப்பிக்க வேண்டும். |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செவின முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்புகள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| நிதிக்கூற்றுடன் சமர்பித்திருந்த ACA-2(II) படிவத்தில் குறிப்பிட்டிருந்த 02 செலவு விடயங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 34,632,783 ஆன மீதி தொடர்பாக சிறந்த திட்டமொன்று மற்றும் கட்டுப்பாட்டின்றி மிகை மதிப்பீடு தயாரித்த காரணத்தால் எஞ்சியிருந்ததால் சமர்பித்திருந்த காரணங்களை கணக்காய்வின் போது ஏற்க முடியாதிருந்தது. | மிகை மதிப்பீடு செய்யவில்லை என அறிவிப்பதுடன், ஏற்பாடு பற்றாக்குறையுள்ள செலவு விடயங்களிற்காக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்தின் மீது நிதிப்பிரமாணம் 66 மூலம் ஏற்பாடு மாற்றப்பட்டிருந்தது. | சிறந்த திட்டமொன்று மற்றும் கட்டுப்பாட்டுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 ஏனைய அமைச்சு மற்றும் திணைக்களங்களினால் வழங்கிய ஏற்பாட்டுப் பயன்பாடு

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் கொள்கை திட்டமிடல் அமைச்சினால் விநியோகித்திருந்த 2014 பெப்ரவரி 17 திகதிய இலக்கம் 01/2014 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் ஒவ்வொறு அமைச்சு மற்றும் திணைக்களங்களும் தமது நிதி ஆண்டிற்குரிய வருடாந்த செயல் நடவடிக்கை திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டிய போதும், அச் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கருத்திட்ட நோக்கத்தை நிறைவேற்றாத காரணத்தால் 13 அமைச்சுக்கள் மற்றும் 14 திணைக்களங்களினால் கிடைத்த ஏற்பாடுகளிலிலிருந்து மீளாய்வாண்டு இறுதியில் கூட்டுத் தொகை ரூபா 1,239,453 மில்லியனான ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிகழ்சசித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டமை, எரிபொருள் பிரச்சினையின் மீது அபிவிருத்தி மட்டுப்படுத்தப்பட்டமை, மதிப்பீட்டை விட மிகக் குறைந்த அளவான தொகை செலவானமை, களப் பணிகள் மட்டுப்படுத்தப்பட்டதால் பிரயாண செலவு ஏற்பாடு எஞ்சியமை, திட்டமிட்டவாறு நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்த முடியாது போனமை போன்ற விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களிலிருந்து வழங்கும் ஏற்பாடுகளை கால நேரத்துடன் பெற்றுக் கொள்ள உரிய வேலைத் திட்டமொன்றை தயாரிக்க வேண்டியதுமை மற்றும் கிடைக்கும் ஏற்பாட்டை முடியுமான வரை பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 05 அமைச்சுக்களினால் 05 நிகழ்ச்சித் திட்டங்களிற்காக வழங்கிய மொத்த ஏற்பாட்டுத் தொகையான ரூபா 18,940.4 மில்லியன் மீளாய்வாண்டு இறுதி திகதியளவிலும் பயன்படுத்தாத காரணத்தால் செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் கருத்திட்ட நோக்கம் அடையப் பெற்றிருக்கவில்லை. | அரசாங்க அமைச்சுக்களின் செலவின தலைப்புகள் மாற்றமடைந்தமை, நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தல் மட்டுப்படுத்தப்பட்டமை போன்ற விடயங்கள் தாக்கம் செலுத்தியிருந்தன. | அமைச்சுக்களிலிருந்து கிடைக்கும் ஏற்பாடுகளில் இருந்து கருத்திட்ட நோக்கம் அடையப் பெறும் வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு பகுப்பாய்வு செய்யப்படுகிறது..

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபன விதிக்கோவை | | | | |
| | XXIV அத்தியாயத்தின் 14.11 பிரிவு | 10,160,998 | சம்பள கடன் முற்பணம் பெற்றுள்ள அலுவலர் ஒருவரின் சேவையை முடிவுறுத்தினால், கடன் தொகையில் அது வரை செலுத்தாத மீதியை அவ் அலுவலரின் ஓய்வூதியத்திலிருந்து அல்லது பணிக் கொடையிலிருந்து சட்ட ரீதியாக அறவிட 23 ஆம் பிரிவிலான ஓய்வூதியத்தை மாற்றுவதற்காக வழங்கப்படும் செல்லுபடியற்றதாக்க முடியாத கூற்றொன்றை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், சம்பள கடன் முற்பணம் தொடர்பாக மாவட்ட செயலகம் மற்றும் பிங்கிரிய, படுவஸ்நுவர (கிழக்கு), கல்கமுவ மற்றும் மாஸ்பொத்த ஆகிய 04 பிரதேச செயலகங்களில் 51 அலுவலர்களிற்காக 70 சந்தர்ப்பங்கிளில் வழங்கியிருந்த சம்பள கடன்கள் தொடர்பாக அவ்வாறான கூற்றை பெற்றிருக்கவில்லை. | பிரதேச செயலகங்களில் சம்பளக் கடன் பெற்றுக் கொள்ளும் போது செல்லுபடியற்றதாக்க முடியாத உத்தரவாத கூற்றொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளதாக மற்றும் பிரதேச செயலகங்களிற்காக அக் கூற்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சம்பள முற்பணத்தை சட்ட ரீதியாக அறவிடும் போது செல்லுபடியற்றதாக்க முடியாத உத்தரவாத கூற்றொன்றை பெற்றுக் கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) பொது நிர்வாக சுற்றறிக்கை<br>---------------------------- | | | |
| i. 2022 மார்ச் 11 திகதிய 03/2021(1) இலக்க சுற்றறிக்கை | இலக்கம் 1589/30 மற்றும் 2009 பெப்ரவரி 20 திகதிய (அதிவிஷேட) வர்த்தமானியில் வெளியிட்டுள்ள பொது சேவைகள் ஆணைக்குழுவின் கடமை ஒழுங்கு விதி XIII அத்தியாயத்தின் அரச உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான ஒழங்கு விதிகளின் பிரகாரம் மேற்கொள்ள வேண்டி இருந்த போதும், உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றம் 2022 ஜுலை 01 திகதி முதல் நடைமுறைப்படுத்த வேண்டிய போதும், 2022 திசெம்பர் 31 திகதியளவில் 07 பிரதேச செயலகங்களில் 210 அலுவலர்கள் 06 ஆண்டு முதல் 22 ஆண்டுகள் வரையான காலமொன்று ஒரே அலுவலகத்தில் கடமையாறிக் கொண்டுள்ளனர். | இவ அலுவலர்கள் ஒரே பிரசேத செயலகத்தில் 05 ஆண்டுகளிற்று அதிக காலம் கடமையாற்றுகின்ற போதும் தொகுதியின் பிரிவுகளிற்கு இடையில் இடமாற்றம் செய்வதாக. | சுற்றறிக்கை பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் இடமாற்றம் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) பொது நிதி சுற்றறிக்கைக<br>--------------------------- | | | |
| i. 2021 சனவரி 11 திகதிய மற்றும் இலக்கம் MF/NPD/01/2021 கொண்ட நிதி அமைச்சு | சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்படும் 13 துறைகளும் காப்புச் செய்யப்படும் வகைகளில் 17 பிரதேச செயலகங்களில் | இக் கருத்திட்ட உத்தேசம் சமர்பிப்கப்பட வேண்டிய குறித்த உறுப்பினரால் | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | செயலாளரின் சுற்றறிக்கை மற்றும் 2021 பெப்ரவரி 10 திகதிய மற்றும் இலக்க MF/NDP/01/2021 (1) கொண்ட நிதி அமைச்சு செயலாளரின் சுற்றறிக்கை | | பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழ்ச்சித் திட்டத்திற்கு ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆகையால் பிரதேச செயலகத் தொகுதிக்காக உத்தேசத்தை வேறாக்கி வழங்க முடியுமான இயலுமை காணப்படுவது குறித்த உறுப்பினருக்கு மாத்திரமே. | துறைகள் காப்புச் செய்யப்படும் வகையில் ஏற்பாடு ஒதுக்கப்பட வேண்டும். |
| ii | 2021 சனவரி 11 திகதிய நிதி அமைச்சு செயலாளரின் மற்றும் இலக்கம் MF/NPD/01/ 2021 சுற்றறிக்கை 2.1 பந்தி | 88,241,505 | பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் மொத்த ஏற்பாட்டில் குறைந்த பட்சம் 50 சதவீதத்தை பிரசேத ரீதியாக செயற்படுத்த முடியுமான மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேம்படுத்த உதவும் பௌதீக உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக ஒதுக்க வேண்டிய போதும், 18 பிரதேச செயலகங்களில் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிகழச்சித் திட்டத்திற்காக ஒதுக்கிய மொத்த ஏற்பாட்டில் உட்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக்காக ஓக்கப்பட்டிருந்தது 24 சதவீதமான ரூபா 21,173,295 மாத்திரமே ஆகும். | இக் கருத்திட்டங்களுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் கொள்வனவு கருத்திட்டங்களுக்குரியதாக சதவீதம் கணக்கிடப்பட வேண்டியது குறித்த உறுப்பினருக்கு உரிய ஏற்பாட்டிற்கு உரியதாக மாத்திரமே ஆகும். | நிதி அமைச்சு சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு அமைய எதிர்பார்த்த துறைகளின் பால் கவனம் செலுத்த வேண்டும். |
| iii | 2021 சனவரி 11 திகதிய மற்றும் இலக்கம் MF/ NPD/01/2021 கொண்ட நிதி அமைச்சு செயலாளரின் | 24,764,749 | பிரதேச செயலக தொகுதியினுள் சனத்தொகை, வருமை மற்றும் பூமி அளவு எனும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்பாடு | ஏற்பாடு பகிர்ந்து செல்லும் வகையில் கருத்திட்டங்களை தெரிவு செய்து செயற்படுத்த | சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கு அமைய பன்முகப்படுத்தப்பட்ட உறுப்பினர் ஏற்பாடு பிரிந்து செல்லும் |

| | | | |
|---|---|---|---|
| சுற்றறிக்கை 2.4 பந்தி | பகிர்ந்து செல்லும் வகையில் கருத்திட்டங்களை தெரிவு செய்து செயற்பட வேண்டிய போதும், 2021 ஆண்டில் உறுப்பினர் ஏற்பாட்டின் கீழ் 18 பிரசேத செயலகங்களில் 229 தெரிவு செய்யப்பட்ட சங்கங்களிற்கு பல சந்தர்ப்பங்களில் பலவித பண்டங்கள் வழங்கப்பட்டிருந்த போதும், 2018 ஆணடு முதல் 2021 ஆண்டு வரை தெரிவு செய்யப்பட்ட 191 சங்கங்களுக்கு ஒவ்வொறு ஆண்டும் பண்டங்கள் பகிர்ந்து வழங்கப்பட்டிருந்தன. | வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட போதும் அதற்குரிய உத்தேசம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எண்ணப்படி சமரிபிக்கப்பட்டிருந்தன. | வகையில் கருத்திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும். |
| (iv) ஏனைய சுற்றறிக்கை<br>---------------------------------<br>i.உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் கடிதம் | | | |
| ➢ 1993 சனவரி 13 திகதிய அனைத்து மாவட்ட செயலாளர்களையும் விழித்த கடிதம்.<br>➢ 2003 சனவரி 06 திகதிய பிரதேச செயலாளர்களை விழித்த கடிதம்<br>➢ 2006 மார்ச் 21 திகதிய HA/DA/12/27 கொண்ட கடிதம | அனைத்து பிரதேச செயலாளர்களும் தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் கட்டயமாக குடியிருக்க வேண்டிய போதும், வாரியபொல மற்றும் நாரம்மல பிரதேச செயலகத்திற்குரிய பூரண நிலையில் காணப்படும் உத்தியோகபூர்வ இல்லங்கள் குடியிருக்க பயன்படுத்தாத காரணத்தால் உத்தியோகபூர்வ இல்லங்கள் | வாரியபொல உத்தியோகபூர்வ இல்லத்தின் கூரை பழுதடைந்துள்ள போதும், பல நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதாகவும் குடியிருப்பிற்கு பொருத்தமற்றதாக அறிவித்துள்ளதுடன், நாரம்மல பிரதேச செயலாளர் | உத்தியோகபூர்வ இல்லத்தின் குடியிருக்க பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | துருப்பிடித்து அழிவடைந்திருந்தன. | குடியிருக்கும் இடத்திலிருந்து 7 கி.மீ தூரத்தில் இருந்து கடமைக்கு வருவதால் உத்தியோகபூர்வ இல்லத்தில் குடியிருக்கவில்லையென. | |
| ii. 2009 பெப்ரவரி 20 திகதிய இலக்கம் 1589/30 கொண்ட வர்த்தமானி பிரகாரம் கடமை ஒழுங்கு விதி 01 பகுதியின் XVIII அத்தியாயத்தின் 202 பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் இணைந்த சேவை அலுவலர்களுக்கான இடமாற்ற ஒழுங்குவிதி 2.2.2 பந்தி | ஒரே சேவை நிலையத்தில் 05 ஆண்டுகளிற்கு அதிக சேவைக் காலத்தை பூர்ணப்படுத்தியுள்ள அலுவலர்களை இடமாற்றத்திற்கு உட்படுத்த வேண்டிய போதும், 12 பிரதேச செயலகங்களில் 2022 திசெம்பர் 31 திகதியளவில் 06 ஆண்டுகள் முதல் 25 ஆண்டுகள் வரை சேவை காலத்தை பூர்த்தி செய்த 258 அலுவலர்கள் தொடர்பாக குறித்த இடமாற்ற ஒழுங்கு விதிகள் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொருத்தமான பதிலீட்டாளர்கள் இல்லாதிருத்தல் மற்றும் விஷேட பயிற்சி பெற்ற அலுவலர்கள் சில சந்தர்ப்பங்களில் இடமாற்றத்திற்கு உட்படுவதில்லாததுடன், ஏனைய அனைத்து அலுவலர்களிற்கும் கடமைக்கு தடை ஏற்படாத விதத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் இணைந்த சேவையின் அலுவலர்களை இடமாற்ற வேண்டும். |
| iii.2021 பெப்ரவரி 11 திகதிய இலக்கம் 2021/03 கொண்ட சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கையின் 04 ஆம் பந்தி. | சமுர்த்தி நிவாரண உதவியாளர்களை தெரிவு செய்யும் போது குடும்ப பொருளாதார நிலை, சொத்துக்கள், வீட்டு நிலைமை போன்றவற்றை கவனிக்க வேண்டியதாக குறிப்பிட்டுள்ள போதும் 03 பிரதேச செயலக பிரிவுகளில் உதவியாளர்களை தெரிவு செய்யும் போது இவ் விடயங்களை கவனிக்காது உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். | தனிநபர் வருமான மட்டம் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தி நிவாரணம் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கிராமிய குழுக்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சுற்றறிக்கை பிரகாரம் உதவியாளர்கள் தெரிவு செய்யப்பட வேண்டும். |

## 2.4 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | பிங்கிரிய பிரதேச செயலகத்தில் பிரதேச செயலக பதவியில் கடமை மேற்கொளவதற்காக இலங்கை நிர்வாக சேவை தரம் I அலுவலர் ஒருவரிற்கு 2019 மாரச் 19 முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரையான காலத்திற்குரியதாக மேலதிக ஊதியமாக ரூபா 66,146 தொகை மேலதிகமாக செலுத்தப்பபட்டிருந்தது. 05 மாத காலத்தினுள் 05 சந்தர்ப்பங்களில் அவற்றில் ரூபா 56,706 தொகை அறிவிட்டிருந்த போதும், எஞ்சிய ரூபா 9,440 தொகையை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், இது தொடர்பாக எவ்வித ஒழுக்காற்று நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | எஞ்சிய தொகையை எதிர்காலத்தில் மிக விரைவில் செலுத்தி முடிப்பதாக பிரதேச செயலாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது. | மேலதி கொடுப்பனவை அறவிட வேண்டியதுடன் குறித்த அலுவலரிற்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 17 பிரதேச செயலகங்கள் ஊடாக ஓய்வூதியம் பெற்றுக் கொள்ளும் 259 ஓய்வுபெற்றவர்கள்/விதவைகளிற்கு கூட்டுத் தொகை ரூபா 52,581,622 ஆன தொகை கூடுதலாக செலுத்தப்பட்டிருந்ததுடன், 2022 மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை அவற்றிலிருந்து மேலும் ரூபா 30,037,359 ஆன தொகை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | கூடுதலாக செலுத்திய ஓய்வூதியத்தை மாதாந்தம் அறவிடுவதாக மற்றும் மேலும் அறவிட வேண்டியுள்ள தொகையை மாதாந்தம் உரியவாறு அறவிடப்படும். | ஓய்வுபெற்றவர்களுக்கு செலுத்திய கூடுதல் தொகையை விரைவில் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், குறித்த பொறுப்புவாய்ந்த அலுவலர்களை உறுதி செய்து அவ் அலுவலர்களிற்கு பொறுப்பை புறக்கணித்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.5 முற்பணம் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குளியாபிடிய (கிழக்கு) பிரதேச செயலகத்தில் சாரதி ஒருவரிடமிருந்து அறவிட வேண்டி இருந்த இடர், விழா மற்றம் துவிச்சக்கர வண்டி கடன் பெறுமதிகள் முறையே ரூபா 145,568, ரூபா 7,500, ரூபா 1,200 ஆக | ஏதிர் காலத்தில் மரண பணிக்கொடையிலிருந்து அறவிடவுள்ளதாக | பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர்கள் தொடர்பாக நிதிப்பிரமானம் 156 (1) பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

கூட்டுத் தொகை ரூபா 154,268 ஆன பெறுமதியை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிட உள்ளதாக அறிவித்த போதும் அவ்வாறு அறவிட நடவடிக்கை எடுக்காது ஓய்வூதிய பணிக்கொடை விடுவிக்கப்பட்டிருந்தது.

## 2.6 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் 23 இல் கணக்கு இலக்கம் 6000-0-0-16-0-42 இன் கீழ் ஒப்பந்த நிறுத்தற்பணம் ரூபா 126,265,499 கூட்டுத் தொகையானது 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் காலம் வரை விடுவிக்க நடவடிக்கை எடுக்காது பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிறுத்தற்பணம் தொடர்பாக பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்துள்ள பணத்தை விடுவிக்க திறைசேரியிடம் முற்பணம் கோரிய போதும் பணம் கிடைக்காததன் மீது நிறுத்தற் பணத்தை விடுவிக்க இயலாதிருந்தது. | காலாவதியான வைப்பு மீதிகள் தொடர்பில் நிதிப் பிரமானம் 571 பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | அரச அபிவிருத்தி செயற்பாடுகளிற்கு காணிகளை சுவீகரிப்பதற்காக இழப்பீடு வழங்க கிடைத்த கூட்டுத் தொகை ரூபா 206,188,466 தொகையிலிருந்து ரூபா 101,282,480 ஆன தொகை 05 ஆண்டுகளிற்கு அதிக காலமாக 16 பிரதேச செயலகங்களினால் கணக்கு இலக்கம் 6000-0-0-17-0-13 கீழ் பொது வைப்புக் கணக்கில் நிறுத்தி வைத்திருந்ததில் காணிகளின் உடமையை பொறுப்பேற்று, சுவீகரிப்பு செயற்பாட்டு முடிவுறுத்தி இழப்பீடு வழங்கல் தாமதமாகி இருந்தது. | காணி சுவீகரிப்பது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கபட்ட காரணத்தால் கொடுப்பனவு செய்ய முடியாதிருந்தது. | காணிகளை சுவீகரிக்கும் இழப்பீட்டிற்காக கிடைத்த பணத்தை விரைவில் தீர்க்க வேண்டும். |
| (இ) | குளியாபிடிய (மேற்கு) பிரதேச செயலகத்தில் 05 ஆண்டுகளிற்கு அதிகமான பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 93,535,533 தொகையும், 04 ஆண்டுகளிற்கு அதிக மீதி ரூபா 921,070 தொகையுமானது. இம் மீதிகள் இலங்கை வடமேல் மாகாண பல்கலைக்கழகம் மற்றும் முதலீட்டு சபையின் கைத்தொழில் கட்டிடத் தொகுதிக்காக காணி சுவீகரிப்பதற்காக வைப்பு | தீர்க்கப்படாத வைப்பு தொடர்பான சட்ட நடவடிக்கைகள் முடிவடைந்தவுடனே அவ் வைப்புக்களை கொடுப்பனவு செய்ய பொது திறைசேரியிடம் கட்டுநிதி கோரி கொடுப்பனவு செய்வதாக. | காணிகளை சுவீகரிக்கும் இழப்பீட்டிற்காக கிடைத்த பணத்தை விரைவில் தீர்க்க வேண்டும். |

செய்யப்பட்ட மீதியாவதுடன், அவற்றை பல ஆண்டுகலாக தீர்க்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரிக்கும் போது மற்றும் நடைமுறைப்படுத்தும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கை திட்டத்தினுள் செயற்பாட்டு கால வரம்பு மற்றும் அச் செயற்பாடுகளின் எதிர்பார்த்த விளைவு/பெறுபேறு காட்டப்படவில்லை. அவ்வாறே சுற்றறிக்கையின் 03 பந்தியின் (ஆ) பிரகாரம் அத் திட்டத்தை வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டை அடிப்படையாக்க கொண்டு முன்னுரிமை பிரகாரம் தயாரித்த செயல் நடவடிக்கை திட்டமொன்றாக வேண்டிய போதும், அவ்வாறு செய்திருக்கவில்லை. | அமைச்சின் மூலம் செயற்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் பிரகாரம் ஏற்பாடு ஒதுக்கப்படுவதுடன், மாவட்ட செயலகத்தினால் இந் நிகழ்ச்சி திட்டம் செயற்படுத்தப்படுவதனால் அதற்கு இணங்க செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படுகின்றது. | பொது நிதி சுற்றறிக்கை பிரகாரம் செயல் நடவடிக்கை திட்டம் தயரிக்கப்பட வேண்டும். |

### 3.2 எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கனேவத்த பிரதேச செயலக தொகுதியில் தித்தவெள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவில் வ/ப தித்தவெள்ள மட்பாண்ட தொழிநுட்ப கிராம கைத்தொழில் சங்கத்திற்கு தொழநுட்ப அபிவிருத்தி சபையினால் 2009 ஆண்டில் ரூபா 866,759 பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டில் பிரம்பு, செப்பு, மட்பாண்ட, மரத்தளபாட கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் ரூபா 4,698,456 ஆன | ஏதிர் காலத்தில் இதனை ஒழுங்காக மேற்கொண்டு செல்ல தித்தவெள்ள மட்பாண்ட கைத்தொழிலாளர்களின் கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | கருத்திட்டத்திற்காக ஈடுபடுத்தியுள்ள பணத்தை பயனுள்ள விதத்தில் ஈடுபடுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2022 ஆண்டில் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டின் கீழ் ரூபா 1,073,552 ஆன திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதும், மத்திய நிலையத்தை நடாத்திச் செல்லும் காணியின் உரிமையை உறுதி செய்திருக்கவில்லை. மத்திய நிலையத்திற்கு சொந்தமான உபகரணங்களை நலன்பெறுனர்கள் பொதுவாக பயன்படுத்துவதனை அவதானிக்க முடியாதிருந்ததுடன், உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் உபகரணங்கள் ஒரு நபரிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தன. அவ்வாறே வழங்கியிருந்த ரூபா 497,224 இற்கான உபகரணங்கள் பல ஆண்டுகளாக பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டதுடன், நலன்பெறுனர்களுக்கு தனிப்பட்ட முறையில் வழங்கியிருந்த மண் அரைக்கும் இயந்திரங்களின் பல குறைகள் காரணமாக பயன்படுத்தப்படாது இருந்தது. | | |
| (ஆ) | கிராமிய மற்றும் பாடசாலை விளைபாட்டு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சினால் 04 பிரதேச செயலகங்களிற்கு உரியதாக ரூபா 6,947,091 ஏற்பாட்டின் கீழ் நிர்மாணித்திருந்த 04 கிராமிய வொலிபோல் விளையாட்டரங்குகள் பயன்படுத்தப்படாது பராமரிப்பு மற்றும் பயனற்று புற்கள் முளைத்து விளைவற்று காணப்பட்டன. | பிரதேச சபையுடன் தொடர்புபட்டு விளையாட்டு மைதானத்தை துப்பரவு செய்து நிலத்தை தயார் செய்து பயன்படுத்த முடியுமான வாறு தயாரிக்கப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தை பயனுறுதி மிக்கதாக நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் செயற்படுத்த வேண்டும். |
| (இ) | எஹடுவெவ பிரதேச செயலக பிரிவில் பிரம்பு, செப்பு, மட்பாண்ட, மரத்தளபாட கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் சணல்களை பயிரிடும் கருத்திட்டத்திற்காக ரூபா 940,760 ஆன ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 581,250 பெறுமதிக்கு 12,500 சணல்பயிர்களை நடுவதற்கு மதிப்பிட்டிருந்த போதும், நிறுவன உத்தியோகத்தர்கள் 20,000 சணல்பயிர்களை நட்டதாக போலியா தகவல் அறிக்கையை சமர்பித்திருந்ததுடன், பௌதீக | இக் கருத்திட்டம் தோல்வி அடைந்த கருத்திட்டமாக கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன், எதிர்பார்த்த பெறுபெறுகள் கிடைக்காததால் இறுதி கொடுப்பனவை செலுத்த முன்னர் மேலும் பரிசோதிப்பதற்காக குழுவொன்றை நியமித்து அதன் பரிந்துரை பிரகாரம் கொடுப்பனவு நிறுத்தப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தை பயனுறுதி மிக்கதாக நோக்கத்தை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் செயற்படுத்த வேண்டும். |

பரிசோதனையின் போது சணல்கள் குறித்த அளவில் நடப்பட்டிருக்கவில்லை.

## 3.3 எதிர்பார்த்த பெறுபேறு (Out come) மட்டத்தை அடைந்து கொள்ளாமை

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஜனாதிபதி செயலகத்தினால் கிராமிய சக்தி மக்கள் இயக்கத்தை நடைமுறைப்படுத்த 2017,2018,2019 ஆண்டுகளில் கட்டம் 1 இன் கீழ் ரூபா 178,789,500 தொகையும், 2022 திசெம்பர் 31 திகதி கட்டம் 11 இன் கீழ் ரூபா 62,680,000 தொகையுமாக கூட்டுத் தொகை ரூபா 241,469,500 தொகை ஏற்பாடாக வழங்கப்பட்டிருந்தது. இச் செயற்பாட்டின் நோக்கம் 2020 அளவில் 5,000 மக்கள் கட்டுப்பாட்டு மற்றும் உற்பத்தி சேவை முன்னிலை கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உருவாக்குவதனூடாக அக் கிராமங்களினுள் வசிக்கும் மக்களின் வாழ்கை நிலையை உயர்த்துவ ஆகும். அதன் பிரகாரம் மக்களின் மாதாந்த வருமானத்தை இரட்டிப்பாக்குதல் இவ் வேலைத் திட்டத்தின் நோக்கமான போதும், அது நிறைவேற்றி இருக்காததுடன், இவ் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த கட்டம் 1 இன் கீழ் 30 பிரதேச செயலக பிரிவுகளினுள் 90 கிராம சக்தி சங்கங்களும், கட்டம் 11 இன் கீழ் 19 பிரதேச செயலக பிரிவுகளினுள் 160 கிராம சக்தி சங்கங்களுக்குமாக கூட்டுத் தொகை 250 கிராம சக்தி சங்கங்களிற்கு வழங்கியிருந்த ரூபா 241,469,500 தொகையில் இருந்து 2022 திசெம்பர் 31 திகதியளவில் ரூபா 109,094,352 ஆன தொகை விளைவற்று காணப்பட்டது. | நாட்டில் நிலவிய கொவிட் தொற்று காரணமாக சிறிய குழுச் செயற்பாட்டை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியாமை, கூட்டங்களை நடாத்த முடியாமை மற்றும் வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் பிரச்சினை காரணமாக இவ் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த முடியாது போனது. | ஜனாதிபதி செயலகத்தினால் நடைமுறைப்படுத்திய கிராமிய சக்தி மக்கள் இயக்கத்தின் நோக்கத்தை ஆக்கபூர்வமாக அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஆ) | கிரிபாவ பிரதேச செயலக தொகுதயில் பொதான கிராம உத்தியோகத்தர் பிரிவில் பால் மற்றும் மரக்கறி, பழங்கள் உற்பத்தி கிராமம் மேம்படுத்த ரூபா 4,465,465 | இப் பிரதேசத்தில் கால்நடைகளுக்கு மாட்டுத் தொட்டிகளினுள் உணவு வழங்கல் குறைந்த அளவில் இடம்பெறுவதுடன், இரவு | கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | செலவொன்றை மேற்கொண்டு பசு மாடுகள், மாட்டுத் தொட்டி நீர் வழங்கல் உபகரணங்கள் மற்றும் பழப் பயிர்கள் வழங்கப்பட்டிருந்த போதும், அதிகமான மாட்டுத் தொட்டிகள் குறைபயன்பாட்டுடன் காணப்பட்டதுடன், வழங்கிய அதிகமான பழப் பயிர்கள் அழிவடைத்திருந்ததுடன், எஞ்சிய பயிர்கள் அறுவடை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. | நேரத்தில் மற்றும் மழை அதிக காலங்களில் மிருகங்களை தொட்டிலினுள் தடுத்து வைப்பதால் மாட்டுத் தொட்டில்கள் பிரயோசனப்படுவதாகவும், அழிந்த பயிர்களிற்காக புதிய பயிர்களை பெற்று பயிரிட ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ) | கல்கமுவ பிரதேச செயலக தொகுதயில் மடதொம்பே பிரிவில் ரூபா 4,875,000 செலவில் சௌபாக்கியா உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் கிலோபேர மற்றும் கொடிதோடை இணைந்த பயிர் செய்கை நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்ததுடன், வழங்கியிருந்த பெறும்பாலான பயிர்கள் இறந்த காரணத்தினாலும், சரியான பயிற்ச்சி வழங்காமையினால் அறுவடை இல்லாததாலும், கருத்திட்டம் தோல்வி அடைந்திருந்த இக் கருத்திட்டத்திற்கு ரூபா 1,000,000 செலவில் 30 பயன்பெறுனர்களை இலக்காக் கொண்டு நிர்மாணித்திருந்த பயிர்செய்கை கிணறுகளை 03 பயன்பெறுனர்கள் மாத்திரம் பிரயோசனப்படுத்தி இருந்தனர். | எரிபொருள் மற்றும் பசளை பற்றாக்குறை காரணமாக இப் பயிர்செய்கைக்காக சரியாக நீர் மற்றும் பசளை இட முடியாது போனதால் பயிர்கள் அழிந்துள்ளதாகவும், தற்போது பயிர்செய்கையின் பராமரிப்பு வேலைகளுடன் அறுவடை பெறப்படுவதாக நீர் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியாதுள்ளதாகவும் கிணற்றிற்கு அருகில் மூன்று பயன்பெறுனர்கள் தங்கள் பயிர்களிற்காக நீரை பெற்றுக் கொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக மற்றும் நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஈ) | பன்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலக தொகுதிக்குரியதாக் சௌபாக்கியா உற்பத்தி கிராம கருத்திட்டத்திற்காக 03 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்குரியதாக ரூபா 4,988,176 செலவில் பிரம்பு, பனை ஓலை சார்ந்த உற்பத்திகள் மற்றும் மட்பாண்டம் சார்ந்த உற்பத்தி கிராமம் ஆக 03 கிராமங்கள் உருவாக்கப்பட்டிருந்ததுடன், பல பிரச்சினைகள் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் திருப்த்தி கரமான மட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்காததுடன், வழங்கியிருந்த அநேக உபகரணங்கள் குறை பயன்பாட்டுடன் நிலவின. | குறைபாடுகளை குறைத்துக் கொண்டு இக் கருத்திட்டத்தை பேணிச் செல்ல பின்னூட்டல் செய்து தேவையான உதவிகளை அவர்களிற்கு வழங்க அபிவிருத்தி உத்தியோகத்தரிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டியமை மற்றும் உபகரணங்களை சரியான முறையில் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | வீரம்புகெதர பிரதேச செயலக தொகுதியில் சௌபாக்கியா உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் ரூபா 3,474,096 செலவில் புடவை உற்பத்தி கொத்தனி கிராம கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்த போதும், அது உற்பத்தி கிராம எண்ணக்கருவிற்கு மாற்றமாக சுயதொழில் மேம்பாட்டு கருத்திட்டம் ஒன்றாக செயற்பட்டிருந்தது. அவ்வாறே கருத்திட்டத்திற்கு சமாந்திரமாக செயற்படுத்திய உட்கட்டமைப்பு மேம்படுத்தல் வேலைத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 2,929,178 ஆன உட்பிரவேச பாதை வேலைத் திட்டத்தின் பயன்பெறுனர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டமொன்றாக இல்லாதிருந்தது. | பயன்பெறுனர் பங்களிப்பை வழங்க முடியாதென அறிவித்து இப் பிரிவுகளில் பயன்பெறுனர்கள் இயந்திரங்களை பெற்றுக் கொள்ள மருத்துள்ளதால் அனைத்து பயன்பெறுனர்களிற்கும் உபகரணங்களை பெற்றுக் கொள்ள முடியாம போனது. | கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பொருளாதார, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ள முடியுமான வகையில் மேற்கொள்ள வேண்டும். |
| (ஊ) | ரிதீகம பிரதேச செயலக தொகுதியில் செயற்படும் சௌபாக்கியா உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் இரண்டு பிரிவுகள் தும்பு சாரந்த உற்பத்தி கிராமம் ஒன்றாக மற்றும் சிறு ஏற்றுமதி பயிர் உற்பத்தி கிரமம் ஒன்றாக அபிவிருத்தி செய்யப்பட்டு இருந்த போதும், தும்பு சார்ந்த உற்பத்திக் கிராமத்திற்காக வழங்கி இருந்த ரூபா 1,478,519 பெறுமதியான தும்பு உற்பத்தி இயந்திரங்கள், கயிறு சுற்றும் இயந்திரம், கயிறு வட்டமாக்கும் இயந்திரம் போன்ற இயந்திரங்கள் கருத்திட்டத்திற்காக போதிய தும்பு இல்லாத காரணத்தால் பயன்படுத்தப்படாது குறை பயன்பாட்டு நிலையில் காணப்பட்டன. | தற்போது தும்பு உற்பத்தி இயந்திரத்தை பொருத்துதல் பூர்த்தியாக்கப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது பொருளாதார, வினைத்திறனாக மற்றும் ஆக்கபூர்வமாக எதிர்பார்த்த நலன்களை அடைந்து கொள்ள முடியுமான வகையில் மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | இரந்தெட்டிகந்த சிறு ஏற்றுமதி பயிர் மேம்பாட்டு மத்திய நிலையத்திற்காக, ரூபா 944,297 செலவில் நிர்மாணித்த கட்டிடத்திற்காக மின் வசதி வழங்கப்படாமை மத்திய நிலையம் வரை பயணிக்கும் பாதை இடர் காரணத்தால் இம் மத்திய நிலையத்திற்கு வழங்கியிருந்த ரூபா 1,595,000 பெறுமதியான உளர்த்தும் இயந்திரம் மற்றும் ரூபா 175,000 பெறுமதியான விதைகளை வேறாக்கும் இயந்திரம் விளைவற்று காணப்பட்டன. அவ்வாறே கருத்திட்டத்தை ஆரம்பிக்கும் போது | விதை உளர்த்தும் இயந்திரம் கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் சிறு ஏற்றுமதி பயிர்கள் உளர்த்த பயன்படுத்துவதாக அறிவிக்கிறேன் | கருத்திட்டங்களை மேற்கொள்ளும் போது அதிக நலன்கள் கிடைக்கும் வகையில் கருத்திட்டங்களை தெரிவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இந் நிலைமை தொடர்பாக கவனம் செலுத்தாத காரணத்தால் கருத்திட்டம் தோலவ்வியடைந்திருந்தது. | | |
| (ஏ) | மாஸ்பொத்த பிரதேச செயலக தொகுதிக்குரிய சௌபாக்கி உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் மிங்ஹெட்டிய பிரிவில் விதை நெல் உற்பத்தி கிராம கருத்திட்டத்திற்காக ரூபா 7,813,495 செலவில் பலதரப்பட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் இந்த உபகரணங்களை பயன்படுத்திருந்த போதும், சாதாரண நெல் உற்பத்தியை தவிர எதிர்பார்த்த விதத்தில் விதைநெல் உற்பத்தி மேற்கொள்ளப்படவில்லை. | போதிய பசளை கிடைக்காமை, கிரிமநாசினி, களைநாசினிகளை பெற்றுக் கொள்வதன் கடினதன்மை மற்றும் விதைநெல் விலை அதிகரிப்பு போன்ற கடினதன்மை காரணமாக விதைநெல் பயிர்செய்கை ஒன்றாக இருக்க வேண்டிய தரம் மற்றும் பயிர்களின் நியமம் ஆரம்பம் முதல் இல்லாதிருந்ததால் விவசாய ஆலோசகரின் பரிந்துரை கிடைக்காததால் அனைத்து வயல்களிலும் சாதாரண பயிரிடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஐ) | வாரியபொல பிரதேச செயலக தொகுதியில் ரூபா 3,800,000 செலவில் வதுரெஸ்ஸ, வெல்கால பிரிவில் புடவை துணை பகுதிகளை தைத்து பூர்த்தி செய்து கொடுக்கும் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி இருந்ததுடன், அதிகமான பயன்பெறுனர்களுக்கு உற்பத்தி நடவடிக்கைகள் மற்றும் தொழிநுட்ப பயன்பாடு பற்றி பயிற்ச்சி இயலுமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டது, தெரிவு செய்த பிரதேசத்தில் பௌதீக அமைவிடம் மற்றும் பயன்பெறுனர்கள் ஒருவருக்கு ஒருவர் தூரத்தில் உள்ளமை, பிரவேச பாதை இல்லாமை போன்ற காரணங்களால் போதிய உற்பத்திகள் மேற்கொள்ள இயலாதிருந்தது. | பயன்பெறுனர்களினால் சமுர்தி படிகள் இல்லாது போகும் என்ற பயம் காரணமாக புடவை உற்பத்தியால் கிடைக்கு வருமானம் தொடர்பான உண்மையான தகவல்களை வெளிப்படுத்தவில்லை என அவதானிக்கப்பட்டது. | கருத்திட்டத்திற்காக பயன்பெறுனர்களை தெரிவு செய்யும் போது சரியான ஒழுங்கு முறை பிரகாரம் தெரிவு செய்ய வேண்டும். |
| (ஒ) | உடுபத்தாவ பிரதேச செயலகத்திற்கு உரியதாக சௌபாக்கி உற்பத்தி கிராம கருத்திட்டத்தின் கீழ் கெகுனாவல பிரிவில் கோழி வளர்ப்பு மற்றும் முட்டை உற்பத்தி கருத்திட்டம் ஒன்றிற்காக ரூபா 4,831,841 செலவில் ஒரு நாள் நிரம்பிய கோழிக் குஞ்சிகளை பகிர்ந்தளித்திருந்த இக் கருத்திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்ட பயன்பெறுனர்களுக்கு | கோழிக் குஞ்சிகளை வழங்கும் போது பயன்பெறுனர்களின் கோரிக்கை மீது ஒரு நாள் நிரம்பிய குஞ்சிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், கோழிக் குஞ்சிகளின் பராபரிப்பை ஆரம்பம் முதல் மேற்கொண்டு செல்ல வேண்டியதால் ஒரு நாள் நிரம்பிய குஞ்சிகளை பெற்றுக் | கருத்திட்டத்திற்காக பயன்பெறுனர்களை தெரிவு செய்யும் போது சரியான ஒழுங்கு முறை பிரகாரம் தெரிவு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கோழித் தீன் மற்றும் மருந்துக்காக பாரிய செலவை மேற்கொள்ள கடினம் காரணத்தின் மீது பெறுமளவு கோழிக் குஞ்சிகள் இறந்திருந்ததுடன், மீண்டும் குஞ்சிகளை இடவும் பயன்பெறுனர்களுக்கு முடியாத காரணத்தால் கருத்திட்டம் தோல்வி அடைந்திருந்தது. | கொள்ள எழுத்து மூலம் கோரிக்கை விடுத்திருந்ததுடன், குஞ்சிகள் இறப்பதற்கான காரணத்தை அறிய மிருக வைத்திய அலுவலகத்திற்கு அனுப்பி ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஓ) | 2021 ஆண்டில் 02 இலட்சம் சமுர்தி குடும்பங்களை வலுவூட்டும் வேலைத் திட்டத்தின் கீழ் 07 பிரதேச செயலக தொகுதிகளில் 38 பயன்பெறுனர்களுக்கு ரூபா 1,611,287 ஆன பண்டங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டு இருந்ததுடன், அப் பயன்பெறுனர்களுக்கே ரூபா 1,119,888 செலவில் கடந்த ஆண்டுகளிலும் பலவித பண்டங்கள் வழங்கப்பட்ட போதும் பயன்பெறுனர்களின் சீவனோபாய அபிவிருத்தி அடைந்து அல்லது உயர்வடைந்துள்ளதா என பின்னூட்டல் இன்றி கடந்த ஆண்டுகளில் வழங்கியுள்ள கருத்திட்டத்திற்கே தேவையான பண்டங்கள் 2021 ஆண்டிலும் வழங்கப்பட்டிருந்தன. | வலுவூட்டும் எண்ணத்தில் உயர் வருமானம் பெறும் பயன்பெறுனர்கள் 2021 ஆண்டில் சீவனோபாய உபகரணங்கள் வழங்க தெரிவு செய்யப்பட்டதுடன், சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நிவாரணத்தை அகற்ற இயலாததால் வலுவூட்ட எதர்பார்க்கும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். | பயன்பெறுனர்களை தெரிவு செய்யும் போது சரியான ஒழுங்கு முறை பிரகாரம், அதிக நலன்கள் கிடைக்கும் வகையில் தெரிவு செய்ய வேண்டும். |
| (ஔ) | 05 பிரதேச செயலகங்களில் 28 பயன்பெறுனர்களுக்கு சீவனோபாய கருத்திட்டத்தின் கீழ் 2015 – 2018 ஆண்டுகளில் ரூபா 513,765 பெறுமதியுடனான பலவித உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டில் அதே பயன்பெறுனர்களுக்கே ரூபா 1,006,197 பெறுமதியான உபகரணங்கள் வழங்கியமையால் குறித்த பயன்பெறுனர்கள் எவ்வித கைத்தொழிலும் நீண்ட காலமாக ஈடுபடாமை உறுதியாகி இருந்ததுடன் 2021 ஆண்டில் பயன்பெற வேண்டிய வேறு தரப்பினர்களுக்கு பயன் கிடைப்பது மட்டுப்படுத்தப்பட்டிருந்தது. | வலுவூட்டும் எண்ணத்தில் உயர் வருமானம் பெறும் பயன்பெறுனர்கள் 2021 ஆண்டில் சீவனோபாய உபகரணங்கள் வழங்க தெரிவு செய்யப்பட்டதுடன், சுற்றறிக்கை ஆலோசனை பிரகாரம் நிவாரணத்தை அகற்ற இயலாததால் வலுவூட்ட எதர்பார்க்கும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். | பயன்பெறுனர்களை தெரிவு செய்யும் போது சரியான ஒழுங்கு முறை பிரகாரம், அதிக நலன்கள் கிடைக்கும் வகையில் தெரிவு செய்ய வேண்டும். |

### 3.4 கருத்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொட்டவெஹர பிரதேச செயலக தொகுதிக்கு சொந்தமான மொன்னேகுலம சேவா பியச அலுவலகத்திற்கு இணைந்த அஞ்சல் அலுவலகம் மற்றும் கூட்டுறவு கட்டிடத்தை நிர்மாணிக்க ரூபா 1,000,000 மதிப்பீட்டின் கீழ் ரூபா 970,000 செலவில் நிர்மாணப் பணிகள் கொங்கிரீட் தூண்களை தயாரிக்க மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டு இருந்ததுடன் இந் நிர்மாணப் பணிகள் முடிவடைந்து ஓராண்டளவு கடந்திருந்த போதும், கட்டிடம் மற்றும் அன்மித்த நிலம் காடுகளால் மூடப்பட்டு கொங்கிரீட் தூண்களிற்கு இடப்பட்டுள்ள கம்பிகள் துருவுடன் துருப்பிடித்த வன்னம் இருந்தன. | கிராமக் குழுவில் நிகவெரடிய பலநோக்கு கூட்டுறவு சகங்கம் வாக்குறுதி அளித்த பிரகாரம் தற்போது இரண்டு கருத்திட்டங்களையும் இணைத்து நிர்மாணத்தை பூர்த்தி செய்ய தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது. | நிர்மாணக் கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 3.5 நிதி விடுவிக்கப்பட்ட போதும் முன்னேற்றத்தை பெற்றுக் கொள்ளாத கருத்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டில் விளையாட்டு பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் இளைஞர் விவகார விளையாட்டு இராஜாங்க அமைச்சினால் இப்பாகமுவ மத்திய மகா வித்தியாலயத்தின் விளையாட்டு மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய ரூபா 20,382,595 ஆன மதிப்பீட்டு ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன், இப் பணத்திலிருந்து ரூபா 19,186,942 செலவு செய்து வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானத்தை பரல் இட்டு தளர்த்தல் மாத்திரம் செய்துள்ளதால், இம் மைதானம் மாணவர்களுக்கு பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மற்றும் அவ்வாறே விளையாட்டு | 2022 ஆண்டிறுதியளவில் ரூபா 19.18 மில்லியன் செலவிட்டதன் மூலம் பரல் மற்றும் மண் தளர்த்தல் செய்துள்ளதுடன், எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்ய ரூபா 24.875 மில்லியன் ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. | நிர்மாணக் கருத்திட்டத்தை திட்டமிட்ட வாறு நடைமுறைப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி கருத்திட்டத்தை பூர்த்தி செய்திருக்காத காரணத்தால் விளையாட்டு பாடசாலை ஒன்றான வித்தியாலயத்தின் விளையாட்டு நடவடிக்கைகள் தற்போது தடைப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | கிராமிய பாடசாலைகளின் விளையாட்டு உட்கட்டமைபு வசதிகளை அபிவிருத்தி வேலைத் திட்டதின் கீழ் ரஸ்நாயகபுர ப்ரதேச செயல தொகுதியிக்கு சொந்தமான நீராலியத்த வொலிபோல் விளையாட்டு அரங்கை ரூபா 1,500,000 ஆன மதிப்பீட்டு பெறுமதியின் கீழ் நிர்மாணித்துள்ள போதும், ஏற்பாடு போதாததன் காரணமாக விளையாட்டு அரங்கை சுற்றி வலை அமைக்கப்பட்டு இருக்காததுடன், பரிசோதிக்கும் சந்தர்ப்பத்தின் போது விளையாட்டு நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தாது மரவல்லி பயிர் செய்கை விளையாட்டு அரங்கினுள் செய்யப்பட்டிருந்தது. | நாட்டில் நிலவிய சீரற்ற பொருளாதார பிரச்சினையின் முன் உணவு பாதுகாப்பை ஏற்படுத்தும் வேலைத் திட்டத்திற்கு அமைய இவ் விளையாட்டு இடத்தை சுற்றி மரவல்லி பயிரிடப்பட்டிருந்தது. | நிர்மாணக் கருத்திட்டத்தை ஆக்கபூர்வமாக நோக்கத்தை அடைந்து கொள்ளும் வகையில் நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (இ) | கிராமிய பொருளாதார பயிர்களை பயிரிடல் மற்றும் மேம்படுத்தும் இராஜாங்க அமைச்சின் ஏற்பாட்டின் கீழ் கிராம பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் சீவனோபாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கில் குருணேகல மாவட்டத்தின் 30 பிரதேச செயலகத் தொகுதிகளில் ரூபா 1,939,350 பெறுமதியான பயறுப் பயிர்களை பயிரிடும் வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்ததுடன் ஆண்டிறுதியில் பயிரிடும் எதிர்பார்ப்பான 231 ஏக்கரில் 26 சதவீதமான 60 ஏக்கர்கள் அளவான பூமிப் பிரதேசம் பயிர் அழிவிற்குட்படல் மற்றும் பயிரிட பயன்படுத்ததாத காரணத்தால் எதிர்பார்த்த அறுவடையான கி.கி 82,720 பயறு விதைகளில் 25 சதவீதமான கி.கி 21,009 பயறு விதையளவு அறுவடை கிடைத்திருந்தது. | அதிக அளவிலான பயன்பெறுனர்களுக்கு நலன்களை வழங்க ஏக்கரிற்கு கி.கி 8 அளவான விதைகள் வழங்கப்பட்டதுடன், காலநிலை நிலைமையின் மீது கிடைத்த அறுவடை பெறுமளவு குறைவடைந்ததால் எதிர்பார்த்த அறுவடையை பெற்றுக் கொள்ள முடியாத போதும் கிடைத்துள்ள அறுவடையின் பெறுமதியை கவனத்திற் கொள்ளும் போது நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருக்கவில்லை. | கிராம பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் சீவனோபாயத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தை எதர்பார்த்த விதத்தில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். |

**3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடுபத்தாவ, குளியாபிடிய (கிழக்கு), மாஸ்பொத்த, மல்லவபிடிய, பன்டுவஸ்நுவர (கிழக்கு), கல்கமுவ மற்றும் ரஸ்நாயகபுர ஆகிய 07 பிரதேச செயலகங்களில் அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு 14 ஆண்டுகள் முதல் 59 ஆண்டுகள் கடந்திருந்த போதும், அவ் அலுவலகங்கள் அமைந்துள்ள காணியை சட்டரீதியாக சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணி சுவீகரிப்பது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக பிரதேச செயலாளர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. | பிரதேச செயலகங்கள் அமைந்துள்ள காணிகளை சட்டரீதியாக சுவீகரிக்க வேண்டும். |
| (ஆ) | கிரிபாவ பிரதேச செயலக தொகுதியில் ஜயன்திபுர கிராம உத்தியோகத்தர் பிரிவில் ராஜாங்கன யாய 04 இல் அமைந்துள்ள கலாஓய தீவில் 49.6122 ஹெக்டயார் காணியில் (124.0305 ஏக்கர்) ஒரு பகுதியை 07 அனுமதியற்ற குடியிருப்பாளர்களினால் மற்றும் மதகுரு ஒருவரினாலும் அனுமதியின்றி கைப்பற்றி பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருந்ததுடன், அவ்வாறே இக்காணி வன பாதுகாப்பு திணைக்ளத்தின் கீழ் ஒதுக்குக் காணியாக பெயரிட தீர்மானிப்பதற்காக இணைந்த பரிசோதனை ஒன்றை மேற்கொண்டு ஓராண்டிற்கும் அதிக காலம் கடந்துள்ள போதும், அதன் மூலம் சரியான தீர்வுவொன்று கிடைத்திருக்கவில்லை. | அனுமதியற்ற 07 குடியிருப்பாளர்களுக்கும் 07 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன், வழக்கு நடவடிக்கைகள் முடிவடையும் வரை காணி தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் நின்றுள்ளது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | உடுபத்தாவ பிரதேச செயலக தொகுதிக்கு சொந்தமான இலக்கம் 52-5707 கொண்ட வண்டியின் 2011 மே 20 திகதி இடம்பெற்ற விபத்து தொடர்பான நட்ட இழப்பு ரூபா 114,650 தொகையான | நட்டத்தை அறவிட குளியாபிடிய பொலீஸினால் குளியாபிடிய மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு முடிவடைந்திருக்கவில்லை. | விளைவற்றுக் காணப்படும் வண்டி தொடர்பாக ஒழுங்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இனங்கண்டிருந்ததுடன், விபத்து ஏற்பட்டு 12 ஆண்டுகள் கடந்துள்ள போதும், குறித்த தரப்பினரிடமிருந்து நட்டத்தை அறவிட நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அவ் விபத்தின் பின்னர் வண்டியை திருதத்தி ஓட்டத்தில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) | கிரிபாவ பிரதேச செயலக தொகுதியில் சந்தகல கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மாதர் கிளினிக்கை பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் ரூபா 1,150,000 தொகையால் தயாரித்து அதற்கு வழங்கியிருந்த கதிரைகள் உள்ளிட்ட உபகரணங்களும் எவ்வித பிரயோசனத்திற்கும் எடுக்காது குறித்த மாதர் கிளினிக் கைவிடப்பட்டிருந்தது. | சந்தகல கிளினிக் மத்திய நிலையம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு 4 கி.மீ தூரத்தில் சோளேவெவ இன்னுமொரு கிளினிக் மத்திய நிலையமொன்று காணப்படுவதால் இந் நிலையத்தை பாரம் நிறுக்கும் நிலையமாக பயன்படுத்தப்படுகிறது. | விளைவற்றுக் காணப்படும் உபகரணங்கள் தொடர்பில் சரியான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (உ) | 13 பிரதேச செயலகங்களிற்குரிய 71 கட்டிடங்கள் மற்றும் அதற்குரிய காணித் துண்டுகளை எவ்வித பிரயோசனமான செயல்களுக்கும் பயன்படுத்தாது விளைவற்று காணப்பட்டன. | விளைவற்று காணப்படும் சொத்துக்களை எதிர் காலத்தில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | விளைவற்று காணப்படும் சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | மாவதகம பிரதேச செயலாளர் ஓய்வு பெறும் சந்தர்ப்பத்தில் களஞ்சிய பண்டங்களை மீள் ஒப்படைக்கும் போது வழங்கியிருந்த டெப்லெட் கணனிக்கு பதிலாக பயன்படுத்த முடியாத வேரொறு கணனியை ஒப்படைத்துள்ளதாக தொழிநுட்ப அறிக்கை மூலம் உறுதியாகியுள்ள போதும் உரிய டெப்லெட் கணனி இயந்திரத்தை மீள்பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிசோதனையொன்றை மேற்கொள்ள பரிசோதனை சபையொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | டெப்லெட் கணனி இயந்திரத்தை மீள்பெற்றுக் கொள்ள வேண்டியமை மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். |
| (எ) | கிரிபாவ பிரதேச செயலக தொகுதிக்கு சொந்தமான கொக்மடுவ மற்றும் ஒருகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் ராஜாங்கன நீர்தேக்கத்திற்குரிய நீரேந்து பிரதேசங்களில் 65 நபர்கள் அனுமதியின்றி குடியேரியுள்ளதுடன், அளவையிடல் | விசாரணையொன்றை மேற்கொள்ள விசாரணைக் குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை தாமதம் காரணமாக உடமையை மீள் பெற்றுக் கொள்ளும் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதில் தாமதம் காணப்பட்டது. | | |
| (ஏ) | குருணேகல பிரதேச செயலக தொகுதியின் கீழுள்ள குருணேகல நகர எல்லையினுள் அமைந்துள்ள அரசிற்கு சொந்தமான மிகப் பெறுமதியான 26 சொத்துக்களை குருணேகல மாநகர சபைக்கு ஒப்படைக்குமாறு கோரியிருந்ததுடன், அவற்றை முறையாக ஒப்படைத்திருக்கவில்லை. அவ்வாறே இச் சொத்துக்களில் அநேகமானவை வர்த்தக நோக்கில் சுவீகரிக்க கோரியிருந்ததுடன், இவற்றை நீண்ட கால குத்தகை அடிப்படையில் ஒப்படைத்து அரசிற்கு வருமானத்தை ஈட்டிக்கொள்ள முடியுமாக இருக்கையில், இது தொடர்பில் உரிய கவனம் செலுத்தி இயிருக்கவில்லை. | குருணேகல மாநகர சபைக்கு ஒப்படைக்க முடியுமான சொத்துக்களை ஒப்படைக்கவும் ஏனைய சொத்துக்களை நீண்ட கால குத்தகை வழங்க முடியுமாக உள்ளதால் அது தொடர்பாக முன்நடவடிக்கை எடுக்க செயற்படுகிறேன். | அரசிற்கு சொந்தமான பெறுமதியான சொத்துக்களை ஒப்படைக்கும் போது அது பற்றி கண்டறிந்து ஒப்படைக்க வேண்டிய சொத்துக்களை மாத்திரம் ஒழுங்கு முறையாக ஒப்படைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | குருணேகல பிரதேச செயலக தொகுதியில் அமைந்துள்ள ஹகுருகெடியாவ கடுவாவேவத்த எனும் 109.77 பர்சஸ் அளவான அரச காணியில் பல ஆண்டுகளாக 17 குடும்பங்கள் அனுமதியின்றி குடியேறி அவர்களால் அனுமதியற்ற நிர்மாணங்களும் மேற்கொண்டுள்ள போதும், கணக்காய்வு திகதியளவிலும் இது தொடர்பாக எவ்வித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | அனுமதியின்றி குடியேறியுள்ள நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரசிற்கு சொந்தமான காணிகளை அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் கைப்பற்றுவது தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.7 நட்டம் மற்றும் இழப் பு**

------------------------------

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பமுனாகொடுவ பிரதேச செயலக தொகுதியில் வலகம பத்துவ கோரளே 1201-வேதண்ட கிராம | தொலைத் தொடர்பு கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள | அரசிற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை குறித்த தரப்பினரிடமிருந்து |

| | | |
|---|---|---|
| உத்தியோகத்தர் பிரிவில் திக்வெஹெர கிராமத்தில் இலக்கம் 47/19/1 மு.பி.கு 1326 கொண்ட வரிபடத்தின் இலக்கம் 54 கொண்ட கொஸ் கெலய எனும் காணித் துண்டை ஒப்படைப் பத்திர உரிமையாளரினால் தனியார் தொலைத் தொடர்பு கோபுரம் ஒன்றை நிர்மாணிக்க 2009 ஆண்டில் கம்பனியொன்றிற்கு வழங்கியிருந்ததால், காணி ஆணையாளர் நாயகத்தின் 2018 ஜுலை 16 திகதிய இலக்கம் 2007/3(iii) சுற்றறிக்கை பிரகாரம் குறித்த பகுதியை மீண்டும் பிரதேச செயலாளரிற்கு சுவீகரித்திருக்காத காரணத்தால் ரூபா 1,015,000 ஆன கணக்கிட்ட நட்டமொன்று அரசிற்கு ஏற்பட்டிருந்தது. | பகுதியை நீண்ட கால குத்தகை அடிப்படையில் குறித்த கம்பனிக்கு ஒப்படைக்கவும் இக் காணியை அரசிற்கு சுவீகரிக்கவும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.8 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------------------------- | ------------------------------- | ---------------- |
| (அ) | பற்செயல் அபிவிருத்தி உதவியாளர்களை நிறந்தர அடிப்படையில் அந்த அந்த இடங்களிற்கு இணைக்க வேண்டிய போதும், பன்டுவஸ்நுவர (கிழக்கு) பிரதேச செயலகத்தில் பற்செயல் அபிவிருத்தி உதவியாளர்களை அவர்கள் இணைக்கப்பட்ட 03 இடங்களிற்கு கடமை அறிக்கையிடல் மறுத்து பிரதேச செயலகத்தில் நின்றதால் மீளாய்வாண்டிற்காக கூட்டுத் தொகை ரூபா 810,000 ஆன படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | வடமேல் மாகாண பற்செயல் பணிப்பாளரின் ஆலோசனை பிரகாரம் திருத்தம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதால், வேறு இடத்திற்கு இணைக்கும் வரை பிரதேச செயலகத்தில் சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | பற்செயல் அபிவிருத்தி உதவியாளர்களிடம் இருந்து எதிர்பார்த்த செயல்களை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | குருணேகல மாவட்ட செயலாளரினால் 2020 திசெம்பர் 21 திகதிய இலக்கம் WDM/SEVI/17/3 கொண்ட பிரதேச செயலாளர்களை விழித்த கடிதம் பிரகாரம் பிரதேச செயலக வளவில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகளை பெற்றுக் கொள்ள தற்போது செயற்படும் பற்செயல் அபிவிருத்தி உதவியாளர்களை எதிர்காலத்தில் ஈடுபடுத்த எதிர்பார்ப்பதாக அறிவித்திருந்த போதும், ரிதீகம், எஹடுவெவ, பன்டுவஸ்நுவர (கிழக்கு) மற்றும் கொடவெஹெர பிரதேச செயலகங்களிற்கு நிறந்தர அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்த 40 உதவியாளர்களால் | பற்செயல் அபிவிருத்தி செயல் உதவியாளர்கள் இதுவரை நிறந்தரமாக்கி கடமையில் ஈடுபடுத்தி இல்லாததால் பிரதேச செயலகத்தில் பாதுகாப்பு மற்றும் சுகாதார சேவைகள் தொடர்பான பொறுப்பை இந்த உதவியாளர்களுக்கு ஒப்படைக்க முடியாததாக அறிவிக்கிறேன். | பற்செயல் அபிவிருத்தி உதவியாளர்களிடம் இருந்து எதிர்பார்த்த செயல்களை மேற்கொள்வதற்காக ஈடுபடுத்த வேண்டும். |

அப் பணியை மேற்கொள்ளாது படிகளாக ரூபா 10,800,000 தொகை செலுத்தி இருந்த உதவியாளர்களை குறித்த பணிக்காக ஈடுபடுத்த இயலுமாக இருக்கையில், தனியார் கம்பனிக்கு ரூபா 4,820,993 தொகை அச் சேவைகளை மேற்கொள்வதற்காக செலுத்தப்பட்டிருந்தது.

## 3.9 முகாமைத்துவ பலவீனங்கள

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிராம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் ஆளுமை விருத்திக்காக குருணேகல மாவட்டத்தில் பிரதேச செயலக தொகுதியில் 1 மற்றும் 11 கட்டங்களை செயற்படுத்த ஒதுக்கிய தொகை ரூபா 52,434,455 ஆனதுடன், 2022 திசெம்பர் 31 திகதி செலவிட்டுள்ள தொகை ரூபா 15,507,338 ஆனது. அதன் பிரகாரம் பணமாக எஞ்சியது ரூபா 36,927,117 தொகை ஆனதில் கிராம அபிவிருத்தி நடவடிக்கைகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் குறைந்த மட்டத்தில் நிலவின. | கொவிட் தொற்று நிலவிய காலத்தில் தவறிய செயல்களை துரிதப்படுத்த மற்றும் குறித்த பயிற்ச்சி வேலைத் திட்டங்களை மேற்கொள்ள அனைத்து பிரதேச செயலாளர்களும் தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதுடன், இப் பயிற்ச்சி வேலைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் காலம் முழுதும் மக்கள் தேவை பிரகாரம் மாத்திரம் செலவிட வேண்டியதால், ஒரே முறையில் செலவிட இயலாதிருந்தது. | கிராம சக்தி வேலைத் திட்டத்தின் கீழ் ஒதுக்கிய தொகையை சரியான முறையில் பயன்பெறுனர்களுக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். |
| (ஆ) | ஆளுமை விருத்திக்காக கிராம அபிவிருத்தி செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த தேவையான அறிவு இயலுமையை பெற்றுக் கொள்ள 09 பிரதேச செயலக தொகுதிகளுக்கு ரூபா 10,429,432 தொகை ஒதுக்கியிருந்த போதும் செலவிடப்பட்டிருந்தது ரூபா 792,510 தொகையாகும். அதன் பிரகாரம் பிரதேச செயலகங்களிற்காக வழங்கிய ஏற்பாட்டிலிருந்து ஆளுமை விருத்திக்காக உச்ச வகையில் பயன்படுத்தாது ரூபா 9,636,922 தொகை செயலற்று நிலவின. | ஆளுமை விருத்திக்காக மொத்த அமைப்புக்களின் அங்கத்தவர்களின் இயலுமையை மேம்படுத்தவும் தேவையான பண்டங்கள் மற்றும் காகிதாதிகளை பெற்றுக் கொள்ளவும், பயிற்ச்சி வேலைத் திட்டங்களிற்காக இந் நிதியத்தை பயன்படுத்த முடியுமெனவும் | செயலற்று காணப்படும் தொகையை பயன்பெறுனர்களின் ஆளுமை விருத்திக்காக உச்ச நிலையில் பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஆளுமை விருத்திக்காக முன்னர் ஒதுக்கியுள்ள 30 சதவீதத்தை 15 சதவீதம் வரை குறைக்கவும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், தற்போது பிரதேச செயலாளர்கள் அதன் பிரகாரம் செயற்படுகின்றனர். | |
| (இ) | சீவனோபாய அபிவிருத்தியின் கீழ் தொழில் முயற்ச்சி அபிவிருத்தி நிதியத்திற்காக ஒதுக்கிய தொகை ரூபா 14,200,007 ஆன போதும், செலவிடப்பட்டிருந்தது ரூபா 3,529,382 ஆனதில், பயன்படுத்தாது ஏற்பாட்டின் 75 சதவீதம் ரூபா 10,670,625 தொகை எஞ்சியிருந்தது. | தொழில் முயற்ச்சி அபிவிருத்தி நிதியத்தின் எஞ்சிய தொகையை செலவிட அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. | சீவனோபாய அபிவிருத்திக்காக ஒதுக்கிய ஏற்பாட்டை உச்ச வகையில் பயன்படுத்த வேண்டும். |
| (ஈ) | தொழில் முயற்ச்சி அபிவிருத்திக்காக குருணேகல மாவட்டத்தில் 12 பிரதேச செயலக தொகுதிகளில் நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 7,405,015 ஆன தொகை ஒதுக்கி இருந்த போதும், எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்காது அத் தொகை எஞ்சியிருந்தது. | இத் தொகை தொடர்பாக மேலதி ஆலோசனை பெற்றுக் கொள்ள அமைச்சிற்கு கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது | தொழில் முயற்ச்சி அபிவிருத்திக்காக ஒதுக்கிய ஏற்பாட்டை உச்ச வகையில் பயன்படுத்த வேண்டும். |
| (உ) | நுன்பாக நிதிக் கடன் வேலைத் திட்டத்தின் கீழ் 1 மற்றும் 11 கட்டங்களிற்காக ஒதுக்கிய தொகை ரூபா 115,346,839 ஆனதுடன், இவற்றில் ரூபா 68,517,082 தொகை கடன் வேலைத் திட்டத்திற்காக செலவிட்டிருந்ததுடன், ஏற்பாட்டில் 41 சதவீத மீதி ரூபா 46,829,757 ஆனது. அவ்வாறே 19 பிரதேச செயலக தொகுதிகளில் அமைந்துள்ள 74 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிற்கு ரூபா 21,470,579 ஆன தொகையை கடன் வழங்க ஒதுக்கியிருந்த போதும், குறித்த கடன் வேலைத் திட்டத்தை செயற்படுத்தி இருக்கவில்லை. | நுன்பாக நிதிக் கடன் வேலைத் திட்டத்தினை மிக விரைவில் ஆரம்பிப்பதாக மற்றும் 2023 ஆண்டிற்காக கடன் வழங்க கடன் மதிப்பீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | நுன்பாக நிதிக் கடன் வேலைத் திட்டத்தின் கீழ் பயன்பெறுனர்களுக்கு ஒதுக்கியுள்ள ஏற்பாட்டிலிருந்து ஒழுங்காக கடன் வேலைத் திட்டத்தை செயற்படுத்த வேண்டும். |
| (ஊ) | பெண்கள் குழந்தைகள் விவகார மற்றும் சமூக வலுவூட்டும் அமைச்சின் கீழுள்ள இலங்கை பெண்கள் பணியகத்தினால் குறை வருமான விதவைகள் மற்றும் குடும்பத் தலைமை பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த பிரதேச செயலக தொகுதி மட்டத்தில் நடைமுறைப்படுத்தியிருந்த கடன் வேலைத் திட்டத்திற்கு அமைய, வெளிநாடு | இவ் வேலைத் திட்டம் ஆரம்ப கட்டத்தினுள் 50 சதவீதத்தை மீள் அறவிடும் அடிப்படையில் செயற்பட்டதுடன், அந்த 50 சதவீதத்தை அறவிடாது உதவி வேலைத் திட்டத்தின் | பெண்களின் பொருளாதார நிலையை மேம்படுத்த கடன் வேலைத் திட்டத்தை சரியான முறையில் செயற்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செல்லவுள்ள பெண்களிற்காக 16 பிரதேச செயலகங்களில் நடைமுறையாகும் இக் கடன் வேலைத் திட்டம் சரியான முறையில் செயற்படாமை மற்றும் விடயத்திற்குரிய அலுவலர்கள் இல்லாமை சில பிரதேச செயலகங்களில் குறித்த கணக்கு செயலற்றிருந்தது. 08 பிரதேச செயலகங்களிற்காக வழங்கிய ரூபா 1,452,700 தொகையான கடன் வேலைத் திட்டங்கள் செயற்படாததுடன், குறித்த கணக்கு செயலற்றிருந்தது. | கீழ் வழங்கியிருந்த வங்கி மீதி உதவி வழங்குமளவிற்கு போதியதாக இல்லாவிடின் பிரதேச பெண்கள் சக்தி சபை கணக்கிற்கு செலவு வைக்க பிரதேச செயலக தொகுதிகளிற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அலுவலர் வெற்றிடங்களிற்காக பதில் கடமைக்கு அலுவலர்களை நியமித்து அவ் வேலைத் திட்டத்தை செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (எ) | நிதி அமைச்சு செயலாளரின் இலக்கம் MF/NPD/01/2021 கொண்ட மற்றும் 2021 சனவரி 11 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிடப்படுவதன் பிரகாரம் 2021 பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டின் பிரதான நோக்கம் கிராமிய அபிவிருத்தியூடாக பிரதேச ரீதியான வேற்றுமையை குறைத்து மொத்தமான பொருளாதார இலக்கை அடைந்து கொள்வதான போதும், சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் எதிர்பார்த்த துறைகளின் பக்கம் கவனம் செலுத்தாது, 18 பிரதேச செயலகங்களில் பதிவு செய்த சங்கங்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்காக பண்டங்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவது தொடர்பில் அதிக முன்னுரிமை வழங்கப்பட்டிருந்ததுடன், இவை மொத்த பன்முகப்படுத்தப்பட்ட ஏற்பாட்டு செலவான ரூபா 88,241,505 இன் ரூபா 41,091,394 தொகை அதாவது 47 சதவீதமானது. அதன் பிரகாரம் பதிவு செய்த சங்கங்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகளிற்காக பண்டங்கள் மற்றும் உபகரணங்களை வழங்க சமய பாடசாலைகள் மற்றும் பன்சல் அபிவிருத்தி, முன்பள்ளி அபிவிருத்தி மற்றும் பதிவு செய்யப்பட் சங்சங்களிற்கு பொருட்களை பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 65,882,099 தொகை அதாவது 75 சதவீதம் செவிடப்பட்டிருந்தது. | ஏற்பாடு பிரிந்து செல்லும் வகையில் கருத்திட்டங்களை தெரிவு செய்து செயற்படுத்த வேண்டுமென சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள போதும், குறித்த முன்மொழிவு பாராளுமன்ற அங்கத்தவர்களின் விருப்பத்தின் பிரகாரம் முன்வைக்கப்படுகின்றது . | சுற்றறிக்கையில் குறிப்பிடப்படும் எதிர்பார்த்த துறைகளின் பக்கம் கவனம் செலுத்துவதற்காக செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | 03 பிரதேச செயலக தொகுதிகளிற்குரிய கடந்த 03 ஆண்டு காலத்தினுள் காட்டு யானை சேதத்திற்காக கூட்டுத் தொகை ரூபா 10,574,971 ஆன ஆதனம், உடல் ரீதியான மற்றும் உயிர் சேதமாக இழப்பீட்டுத் தொகை வழங்கியிருந்த போதும், கடந்த காலப் பகுதிக்குரியதாக அபிவிருத்தி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது காட்டு யானை பிரச்சினைக்கு தீர்வு பெற்றுக் கொள்ளக் கூடிய அபிவிருத்தி கருத்திட்டத்தின் பக்கம் கவனம் செலுத்தி இருக்கவில்லை. | அன்மை காலமாக அபிவிருத்தி உத்தேசங்களை முன்வைக்கையில் அதன் தலைமைத்துவ அரசியல் அதிகாரத்திற்கு உரித்தாதல் மற்றும் பிரச்சினைக்குரிய கருத்திட்டங்களை மேற்கொள்ள போதிய பணம் ஒதுக்கப்படாமை காரணமாக இந் நிலைமை ஏற்பட்டுள்ளதுடன், காட்டு யானை தொல்லையை கட்டுப்படுத்த சில செயற்பாடுகள் எடுக்கப்படும். | அபிவிருத்தி கருத்திட்டங்களை செயற்படுத்தும் போது காட்டு யானை தொல்லையை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஐ) | 04 பிரதேச செயலகங்களில் 54 பயன்பெறுனர்களுக்கு 02 ஆண்டு முதல் 25 ஆண்டு வரையான காலத்தில் ரூபா 9,267,408 பெறுமதியான சமுர்த்தி நிவாரணம் உள்ளிட்ட ஏனைய நிவாரணங்கள் ஊடாக சீவனோபாயம் அபிவிருத்தி அடைந்துள்ளதாக பிரதேச செயலக சமுர்த்தி பிரிவினால் இனங்கண்டுள்ள போதும், அப் பயன்பெறுனர்களின் சமுர்த்தி நிவாரணத்தை அகற்ற நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மேலும் தனிநபர் வருமான மட்டம் தொடர்பாக அதிக கவனம் செலுத்தி நடவக்கை எடுக்குமாறு கிராமிய குழுக்களுக்கு அறிவித்துள்ளதுடன், உள்ளிட்ட பயன்பெறுனர்களுக்கு நாட்டில் நிலவிய பொருளாதார சீர்கேட்டு நிலைமையின் மீது கருத்திட்டம் மேற்கொள்ள கடினமாகையால் நிவாரணம் அகற்றப்படவில்லை எனவும், இவ்வாண்டினுள் பயன்பெறுனர்களை வலுவூட்டி நிவாரண செயற்பாட்டை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். | பிரதேச செயலக தொகுதியினுள் உள்ள சமுர்தியாளர்கள் முன்னேரிய பின்னர் முறையாக இனங்கண்டு அகற்ற செயற்பாடுகளை எடுக்க வேண்டும். |
| (ஒ) | 03 பிரதேச செயலக தொகுதிகளில் 10 பயன்பெறுனர்களுக்கு சமுர்தி சீவனோபாய அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் வழங்கியிருந்த ரூபா 574,935 பெறுமதியான உபகரணங்களை பயன்படுத்தி எவ்வித சீவனோபாய அபிவிருத்தி நடவடிக்கையிலும் ஈடுபடாததால் அவ் இயந்திர மற்றும் | இவ் உபகரணங்களை வலயத்திலுள்ள பொருத்தமான பயன்பெறுனர்களுக்கு கிராமிய குழுக்களின் அங்கீகாரத்தின் கீழ் எதிர்காலத்தில் வழங்க | வழங்கப்பட்ட ஏற்பாடுகளிலிருந்து ஒழுங்கான முறையில் பயன்பாடொன்று இடம்பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க |

| | | |
|---|---|---|
| உபகரணங்களை மீண்டும் பெற்று பொருத்தமான பயன்பெறுனர்களுக்கு வழங்க அல்லது அரசின் பங்களிப்பை அறவிட அல்லது வேறு பொருத்தமான செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்டுளளது. | வேண்டும். |
| (ஓ) களத்தில் கடமையில் ஈடுபட்டுள்ள கள உத்தியோகத்தர்களினால் குறித்த மாதத்தில் முன்வேலைக் குறிப்பை அதற்கு முன்னைய மாதம் 25 திகதிக்கு முன்னர் பதவிநிலை உத்தியோகத்தரிற்கு சமர்பித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டியதுடன், அந்த அந்த மாதத்தில் செய்த வேலைத் குறிப்புகளை அதற்கு பின்னைய மாதம் 05 திகதிக்கு முன்னர் பதவிநிலை உத்தியோகத்தரிற்கு சமர்பித்து அங்கீகரித்துக் கொள்ள வேண்டிய போதும், 04 பிரதேச செயலகங்களிற்குரியதாக நடாத்திச் செல்லப்படும் ஆவணங்கள் மற்று முன்/ மேற்கொண்ட வேலைக் குறிப்பு கடிதக் கோவைகளின் பிரகாரம் 34 அலுவலர்கள் 01 மாதம் முதல் 09 மாதகாலத்திற்காக முன் வேலைக் குறிப்பையும், 101 பேர்கள் 01 மாதம் - 07 மாதத்திற்கு இடையிலான காலத்திற்காக மேற்கொண்ட வேலைக் குறிப்பையும் சமர்பித்திருக்காததால், அவ் அலுவலர்களுக்கு பிரயாணப் படிகள் செலுத்தியது எவ்வடிப்படையில் என்பது கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | இதன் பின்னர் அவ்வாறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுப்பதால் குறித்த அலுவலர்கள் அனைவர்களையும் அறிவூட்டியுள்ளதாகவும் முன்னைய மற்றும் மேற்கொண்ட வேலைக் குறிப்புகளை உரிய திகதிக்கு முன்னர் சமர்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தது. | முன்வேலைக் குறிப்பு மற்றும் மேற்கொண்ட வேலைக் குறிப்புகளை உரிய திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ள நடவக்கை எடுக்க வேண்டும். |

## 3.10 அமைச்சரவை தீர்மானங்களிலிருந்து வேறுபடல்

--------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 பெறும் போகத்திற்கு சூழல்நேய பசளைகளின் விலைகளிற்காக கொடுப்பனவு செய்ய அங்கீகாரத்தை பெறுவதற்காக கமநல அமைச்சரினால் 2022 நவம்பர் 01 திகதி இலக்கம் OF/79/2022 விஞ்ஞாபனத்தின் மூலம் அமைச்சரவை தீர்மானமொன்றை நிதி அமைச்சரிற்கு சமர்பித்திருந்ததுடன், அதற்குரிய தொகை, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரின் 2022 நவம்பர் 17 திகதிய | கமநல அமைச்சின் செயலாளரின் கடிதம் மூலம் அனைத்து மாவட்ட செயலாளர்களையும் விழித்து சூழல்நேய பசளை வழங்குனர்களுக்கு பணம் செலுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. | அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

இலக்கம் DF/D/CO/2022-19 கொண்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்குரிய அமைச்சரவைக்கு முன்வைத்துள்ள அவதானிப்பு இலக்கம் 1 பிரகாரம் வழங்குனர்களுக்கு மாவட்ட செயலாளர்களின் பரிந்துரையின் மீது கொடுப்பனவு, அமைச்சு மட்டத்தில் மேற்கொள்ள வேண்டுமென காட்டப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2022 நவம்பர் 21 திகதி நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் அமைச்சரவை பத்திர இலக்கம் 22/1745/612/013-1 இல் குறிப்பிடப்படும் அமைச்சரவை தீர்மானம் (11)(இ) பிரகாரம், அந்த அந்த மாவட்டங்களுக்கு தெரிவு செய்யப்பட்ட சூழல்நேய பசளை வழங்குனர்களினால் வழங்கப்படும் பசளைகளுக்கான கொடுப்பனவு, குறித்த மாவட்ட செயலாளர் / அரசாங்க அதிபர் பரிந்துரை மீது கமநல அமைச்சினால் தீர்க்க முடியுமான வகையில் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அறிமுகஞ் செய்வதன் மூலம் இடம்பெற வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், கமநல அமைச்சின் செயலாளரின் 2022 ஒக்டோபர் 10 திகதிய இலக்கம் SMA/ACC/11/Fertilizer கொண்ட கடிதம் மூலம் கொடுப்பனவு செய்ய மாவட்ட செயலாளரிற்கு ரூபா 823,481,050 தொகை வழங்கப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் மாவட்ட செயலாளர்களின் பரிந்துரையின் மீது கொடுப்பனவு நடவடிக்கைகள் கமநல அமைச்சினால் மேற்கொள்ள வேண்டிய போதும், குருணேகல மாவட்ட செயலகத்தினால் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்காத வகையில் 12 சூழல்நேய பசளை வழங்குனர்களுக்கு ரூபா 205,000,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. மீண்டுமொரு முறை கமநல அமைச்சரினால் 2023 மார்ச் 29 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை சமர்பித்திருந்ததுடன், அதற்காக 2023 ஏப்ரல் 26 திகதி மாவட்ட செயலாளர்களினால் கொடுப்பனவு செய்ய அமைச்சரவை தீர்மானமொன்றை எடுத்திருந்த போதும், மேற்குறித்த பணக் கொடுப்பனவிற்காக அமைச்சரவை தீர்மானமொன்று கிடைத்திருக்கவில்லை.

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்

பின்வரும் அவதானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச நிதி முன்னுரிமை பிரகாரம் கவனிக்கப்பட்ட இடைக்கால சகல நிதி சட்டகம் மற்றும் மதிப்பிடப்பட்ட வளங்களுடன் பாதீட்டு செயற்பாட்டை செயற்படுத்தும் போது நிதி ஒழுக்கத்தை வலுவூட்டுவதை போன்றே அரச கொள்கை முன்னுரிமையுடன் பாதீட்டு ஒதுக்கீடு மற்றும் செலவுகள் வரிசைப்படுத்தப்பட்டு இருக்காததுடன், செயலாற்றுகையின் மீது அடிப்படையில் பாதீட்டுமய முறைமையொன்றை மேற்கொள்ளாது வருடாந்தம் அடைந்து கொள்ளும் இலக்குகளை மாத்திரம் நிலைபேறான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்ளும் முன்னேற்றமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | நோக்கம் 14 மற்றும் 17 மாவட்ட மட்டத்தில் செயற்பட கடினமாவதுடன், அதற்காக தேசிய மட்டத்தில் செயற்பட வேண்டியதால் நிலைபேறான நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் உட்படுத்தி இருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய முடியுமான வரை நடைமுறைப்படுத்த வேண்டும். |
| (ஆ) | அநேகமான நிலைபேறான நோக்கங்களை நிறைவேற்றும் நிதி முன்னேற்றம் காண்பிக்கப்பட்டிருந்த போதும், நிதி முன்னேற்றத்திற்கு ஒப்பாக பௌதீக முன்னேற்றம் மற்றும் பெற்றுக் கொண்ட வெற்றிகளின் நிலைபேறான தன்மையை அவற்றின் மூலம் அவதானிக்க முடியாததால் மேற்கொண்ட பணிகள் ஊடாக நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை நிறைவேற்றும் முன்னேற்றத்தை உறுதி செய்து கொள்ள இயலாதிருந்தது. | அமைச்சுக்களிலிருந்து கிடைக்கும் ஏற்பாடு ஒதுக்கீடு இடம் பெறுவதுடன், அரச கொள்கை முன்னுரிமை பிரகாரம் பாதீட்டு ஒதுக்கீடு மேற்கொள்ள இவ் அலுவலகத்தின் எல்லையினுள் மேற்கொள்ள இயலாதிருந்தது. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்ளும் முன்னேற்றத்தை செயல் நடவடிக்கை திட்டத்திற்கு உட்படுத்த வேண்டும். |
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களிற்காக 210 செயற்பாடுகளை செயற்படுத்த நோக்காகக் கொண்டிருந்த போதும், மீளாய்வாண்டு இறுதியில் 163 செயற்பாடுகள் மாத்திரமே செயற்படுத்தப்பட்டிருந்தன. | மட்டுப்படுத்தப்பட்ட ஏற்பாடுகளினூடாக இந்த 17 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களையும் மேற்கொள்ளும் முன்னேற்றம், எதிர்பார்க்கும் தேசிய மட்டத்திலான நோக்கத்தை அடைந்து கொள்ள மாவட்ட மட்டத்தில் உச்ச பங்களிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன். | செயல் நடவடிக்கை திட்டத்திற்கு அமைய நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை மேற்கொள்ளல் முடியுமான வரை நடைமுறைப்படுத்த வேண்டும். |

5. நல்லாளுகை

5.1 பொது மக்களிற்காக சேவை வழங்கல்

| கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 17 பிரதேச செயலகங்களில் வளங்கள் பிரதிபளிப்பு பிரகாரம், மின்சாரமற்ற 2,856 வீடுகள், மலசலகூடம் இல்லாத 4,990 வீடுகள், குழி மலசலகூடங்களுடன் கூடிய 2,314 வீடுகள், 2,961 தற்காலிக வீடுகள் மற்றும் குடியிருக்க வீடற்ற 2,851 குடும்பங்கள் இருக்கின்ற போதும், 2021 பெப்ரவரி 10 திகதிய இலக்கம் MF/NPD/01/2021(i) கொண்ட நிதி அமைச்சின் செயலாளரின் சுற்றறிக்கையின் 1.13 பிரிவின் பிரகாரம் சுகாதார வசதிகள் இல்லாத வீடுகளிற்காக மலசலகூட வசதிகளை ஏற்படுத்துதல், நிலையான வீடுகளிற்காக மின்சார வசதி ஏற்படுத்தல் மற்றும் குடிநீர் தொடர்பை பெற்றுக் கொடுக்க குருணேகலை மாவட்டத்தில் 17 பிரதேச செயலகங்களிற்காக கிடைத்த ரூபா 88,241,505 தொகை ஏற்பாட்டில் 01 சதவீத தொகையான ரூபா 746,960 ஆன தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஒவ்வொறு ஆக்க கூறுகளிற்கும் ஒதுக்க வேண்டிய சதவீதங்களை இச் சுற்றறிக்கையில் அறிவித்தில்லாதல், அரசியல் அதிகாரங்களின் தீர்மானத்தின் பிரகாரம் முன்வைக்கப்படும் உத்தேசங்களை மருக்கும் இயலுமை இல்லாதுள்ளமை. | வழங்கியுள்ள ஏற்பாடுகளிலிருந்து கருத்திட்டத்தை வினைத்திறனாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

6. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சிரேஷ்ட, மூன்றாம் மற்றும ஆரம்ப மட்டத்தில் முறையே மூவர், இருபது பேர்கள் மற்றும் இருபது பேர்கள் வீதம் பதவி வெற்றிடம் காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஒவ்வொறு மாதமும் முதலாம் திகதி மற்றும் பதினைந்தாம் திகதி MOHA தரவுத் தொகுதி நாளாதுவரையாக்குதல் மூலம் அமைச்சிற்கு அறிவித்துள்ளதுடன், வெற்றிடம் தொடர்பான தகவல்கள் ஒவ்வொறு மாவட்ட அதிபர் கூட்டத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | பிரதேச செயலகங்களில் நிலவிய வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) இரண்டாம் நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் 217 அலுவலர்கள் மிகையாகக் காணப்பட்டது. | புதிய பதவிகளிற்காக 2022 திசெம்பர் 31 வரையும் அங்கீகாரம் கிடைத்தில்லாததுடன் 217 அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மிகையாகக் காட்டப்படுகின்றது. | மேலதி அலுவலர்களிற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) நிறைவேற்று தரத்தில் உதவி பணிப்பாளர் திட்டமிடல் 02 பதவிகளும், இரண்டாம் தரத்தில் மேலதிக மாவட்ட பதிவாளர் 04 பதவிகளும், 10 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளும், 8 நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவிகளுமாக 24 அளவான பதவிகளை வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இவ் வெற்றிடங்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் அமைச்சிற்கு அறிவித்துள்ளதுடன், மேலதிக மாவட்ட பதிவாளர் பதவி, பதிவாளர் நாயக திணைக்களத்தினால் நிரப்புவதுடன், நிர்வாக உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்ப்பு மேற்கொள்ளாததுடன், நிர்வாக கிராம உத்தியோகத்தர் பதவி தொடர்பாக அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலவிய வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |